வீரகெடிய பிரதேச சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீரகெடிய பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வீரகெடிய பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் போது தனதாக்கப்பட்ட மற்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணிகள், கட்டிடங்கள் மற்றும் கொள்வனவு செய்திருந்த இயந்திரங்கள், இயந்திர உபகரணங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 2.54 மில்லியன் தொகை நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகையின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்யப்படும் என.	தனதாக்கப்பட்ட மற்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மற்றும் கொள்வனவு செய்திருந்த இயந்திர உபகரணங்கள் 2025 ஆண்டில் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 163,876 தொகைக்கான மீண்டுவரும் செலவுகள் மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	மீண்டுவரும் செலவுகள் தவறுதலாக மூலதனச் செலவுகளாக பதியப்பட்டிருந்தது என.	மூலதனச் செலவுகள் மற்றும் மீண்டுவரும் செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	கூட்டுப்பெறுமதி ரூபா 761,561 தொகைக்கான செலவுகள் அட்டுறுச் செலவுகள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்தல் மேற்கொள்ளப்படும்.	கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாத ரூபா 761,561 இற்கான செலவு 2025 ஆண்டில் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 4,442,464 தொகையினால் குறைவாகவும், பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 246,556 தொகை மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் சரி செய்தல் மேற்கொள்ளப்படும்.	முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் பெற வேண்டிய மீதிகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	ரூபா 987,966 தொகைக்கான பெறுமதியையுடைய ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், செலுத்த வேண்டிய மீதிகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் சரி செய்தல் மேற்கொள்ளப்படும்.	மிகையாக கணக்கீடு செய்யப்பட்ட நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி சரி செய்யப்பட வேண்டும்.

(ஊ)	முன்னைய ஆண்டின் போது உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 85,218 தொகை பெறுமதியான 1000 லீற்றர் கொண்ட 07 நீர்த் தொட்டிகள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 ஆண்டின் போது குறிப்பிட்ட சரி செய்தல் மேற்கொள்ளப்படும் என.	நன்கொடையின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டின் போது வருமானம் என இனங்கண்டிருந்த ரூபா 641,226 இற்கான பாதுகாப்பு பிணை வைப்பு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால், ஆண்டிற்கான மிகை அந்தப் பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படும் என.	மீளாய்வாண்டிற்குரிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஏ)	முன்னைய ஆண்டின் கடன்கொடுத்தோர் கொடுப்பனவு ரூபா 1.27 மில்லியன் தொகை ஆண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் செலுத்த வேண்டிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	மிகையான கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1.27 மில்லியனிற்கான செலவுகள் சரி செய்யப்பட வேண்டும்.

1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப்பதிவேடு / அட்டவணைகளில் காட்டபட்டுள்ள மீதிகளிடையே ரூபா 37.39 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	துணைப் பதிவேடுகளின் மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	துணைப் பதிவேடுகள் நாளதுவரை ஆக்கப்பட்டு கணக்கு மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்யப்பட வேண்டும்.

1.6.3 கணகக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலையான சொத்துக்கள் பதிவேட்டு பெறுமதி ரூபா 49.11 மில்லியன் தொகைக்கான இரண்டு கணக்கு விடயங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் திருப்திகரமான பரிசோதனைகள் மேற்கொள்ள முடியவில்லை.	பதிவேடு காணப்படாததுடன், பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக்கூடிய நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்தல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20	05 வருடங்களுக்கு ஒருமுறை வீதவரி ஆதனங்கள் பெறுமதி செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாமல், 2002 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போதும் வீதவரி அறவீடு செய்திருந்தது.	2025 ஆண்டு முதல் புதிய பெறுமதி மதிப்பீடு செயற்படுத்தப்படுகின்றது என.	குறிப்பிட்ட விதிகளின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒருமுறை வீதவரி ஆதனங்கள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2022 ஜனவரி 27 திகதிய 2264/18 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்	மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 16 அலகுகள் அதனை பெற்றிருக்காமையால், சபை நிதியத்திற்கு சேகரிக்கக்கூடியதாக இருந்த ரூபா 72,000 இற்கான வருமானம் ஒன்றை இழந்திருந்தது.	இந்த வியாபார அலகுக்காக எழுத்துமூல அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டது என.	சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 16 வியாபார நிலையத்திற்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 67.51 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 41.19 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

வருமான மூலம்	2024 மதிப்பீட்டு வருமானம்	2024 சிட்டையிடப்பட்ட வருமானம்	2024 சேகரிக்கப்பட்ட வருமானம்	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	2023 மதிப்பீட்டு வருமானம்	2023 சிட்டையிடப்பட்ட வருமானம்	2023 சேகரிக்கப்பட்ட வருமானம்	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	3,847,500	16,957,935	17,552,624	3,761,508	3,835,000	3,744,817	4,907,714	4,356,197
வாடகை	40,237,200	43,474,276	45,518,745	6,588,509	31,582,600	62,201,239	72,307,611	8,632,978
அனுமதிப் பத்திரக் கட்டணம்	2,813,000	3,795,516	3,463,781	721,818	2,155,000	3,320,755	3,494,147	390,083
ஏனைய வருமானங்கள்	64,382,280	26,064,972	26,078,861	-	14,523,000	15,985,664	15,971,775	13,889
மொத்தம்	111,279,980	90,292,699	92,614,011	11,071,835	52,095,600	85,252,475	96,681,247	13,393,147

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2235 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 3.4 மில்லியனிற்காக வீதவரியை அறவீடு செய்வதற்கு பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வீதவரி ரூபா 514,421 தொகை அறவிடப்பட்டதெனவும், மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ) பிரதேச சபைச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் வீதவரியொன்று சபையினால் கட்டளையிடப்படுகின்ற காலப் பகுதியினுள் செலுத்தப்படாவிடின் அந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் மூலம் சபை உத்தியோகத்தர் ஒருவருக்கு அதிகாரமளிக்கப்பட்டு அந்த நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், நிலுவை மீதி ரூபா 5,000 தொகையை விட மிகையான 164 ஆதன உரிமையாளர்களிடம் பெற வேண்டிய வீதவரி ரூபா 1.19 மில்லியன் தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	ரூபா 158,349 தொகை அறவீடு செய்யப்பட்டதுடன், மேலும், அறவீடு செய்யப்பட வேண்டிய நிலுவை வரித் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சட்டத்தின் பிரிவு 158(1)(அ) பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

(இ)	பெற வேண்டிய கடை வாடகை மற்றும் பெற வேண்டிய சந்தை வாடகை ரூபா 6.59 மில்லியன் தொகை அறவீடு செய்திருக்கவில்லை.	கடை வாடகை ரூபா 18,000 தொகை மற்றும் சந்தை வாடகை ரூபா 929,305 தொகை அறவீடு செய்யப்பட்டதுடன், நிலுவை மீதிக்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த அறிவித்தல் பலகைகளுக்காக பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 709,310 இற்கான கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 596,060 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீதியான நிலுவைத் தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிக் காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டனம் முறையே ரூபா 3.34 மில்லியன் தொகை மற்றும் ரூபா 58.05 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.	நீதிமன்றத் தண்டப்பண நிலுவையில் ரூபா 3.29 மில்லியன் தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், மீதி நிலுவைத் தொகையை பதிவழிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது எனவும், முத்திரைக் கட்டண நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	பிரதான செயலாளர், ஆளுனர் மற்றும் காணிப் பதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
03 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக சபையின் இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2014 ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. அதற்காக சபைக்கு ரூபா 906,429 தொகை பெற வேண்டிக் காணப்பட்ட போதிலும், அவற்றில் ரூபா 413,529 தொகை திருத்த முடியாதென சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தமையால் வாடகைத் தொகை உரிய முறையில் அறவீடு செய்து இயந்திரம் மற்றும் வாகனங்கள் வழங்கப்படாமையால் நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்திருக்கவில்லை.	நிலுவைத் தொகையை செலுத்துமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அந்தத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 413,529 இற்கான வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும்.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
வீரகெடிய பொதுச் சந்தையை வாடகைக்கு எடுத்திருந்த வாடகையாளரினால் 2007 ஆண்டு செலுத்த வேண்டிய ரூபா 820,558 இற்கான தொகையொன்று செலுத்தப்படாமையால், வாடகையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக M-687 வழக்குத் தீர்ப்பின் படி நிலுவை வாடகைத் தொகை, சட்டவரைஞர் கட்டணம் வாடகையாளரிடம் அறவீடு செய்துகொள்ளும் படி 2019 நவம்பர் 28 திகதி தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 திசெம்பர் 31 திகதி அளவில் தீர்ப்பு வழங்கப்பட்டு 05 வருடம் கடந்திருந்த போதிலும், அந்தத் தொகையை அறவீடு செய்வதற்கு சபையின் முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக தொடர் நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளும் சட்ட வரைஞருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்துடன், அந்தப் பணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	குறிப்பிட்ட வழக்குத் தீர்ப்பினை உடனடியாக செயற்படுத்த வேண்டும்.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் போது சபையினால் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த 23 கைத்தொழில்களினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டிருக்காமையால், சபைக்குக் கிடைக்க வேண்டிய ரூபா 103,500 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.	06 கைத்தொழில்கள் தொடர்பாக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு நிதி அறவீடு செய்யப்பட்டது எனவும், மீதியான கைத்தொழில்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	வியாபார நிலையங்களை சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	24 ஏக்கர் 26.83 பர்சஸ் அளவான 24 காணித்துண்டுகள் மற்றும் 02 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்ட போதிலும், அவற்றை உரித்தாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காணிகள் மற்றும் வாகனங்களை உரித்தாக்குவதற்குரிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 24 காணிகள் மற்றும் 02 வாகனங்களை சட்டரீதியான உரிமையை உரித்தாக்கிக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான காணிகளில் விளைச்சல்களை குத்தகைக்கு கொடுத்து வருமானம் சேகரிக்க முடியுமாக இருந்த போதிலும், 01 ஏக்கர் 03 ரூட் 27.12 பர்சஸ் அளவைக் கொண்ட 05 காணிகள் அவ்வாறு விளைச்சலை குத்தகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	விளைச்சல்களை குத்தகைக்கு கொடுப்பதற்காக கூறுவிலைகள் அழைக்கப்பட்டு குத்தகைதாரர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபைக்குச் சொந்தமான காணிகள் ஆக்கபூர்வமான அலுவல்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	02 ஏக்கர் 02 ரூட் 39.18 பர்சஸ் அளவினை கொண்ட 05 காணிகள் அங்கீகாரம் இன்றி பயன்படுத்தப்பட்ட போதிலும், தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காணிகளை இனங்கண்டு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என.	சபைக்குச் சொந்தமான காணிகளில் அங்கீகாரம் இன்றி பயன்படுத்துவோரை அகற்றி பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.
(ஈ)	ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான R2Sakai வாகனத்தை திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அப்புறப்படுத்துவதற்கு தேவையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என.	வாகனத்தை அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	ரூபா 165.13 மில்லியன் தொகை பெறுமதியான வலஸ்முல்ல பஸ் நிலையத்திற்கு முன் பக்கமாக காணப்படும் 14 கடையறைகளின் பெறுமதி ரூபா 15.13 மில்லியனிற்கான வீரகெடிய சந்தைக்கு அண்மையிலுள்ள கடையறைகளின் மேல் மாடியின் அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் கட்டிடம் அழிவடையும் நிலையில் காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக சபை முறையான	2026 ஆண்டின் பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு மேற்கூறிய அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.	சொத்துக்களை பாதுகாப்பதற்கு தேவையான முறையான அபிவிருத்தித் திட்டமொன்றின் படி மேற்கொள்ள வேண்டும்.

	செய்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(ஊ)	வலஸ்முல்ல பஸ் நிலையத்திற்கு முன்பக்கமாக கடையறையொன்று மற்றும் பொதுச் சந்தைக் கட்டிடத்தில் 135 நீலம் 25.3 அடி அகலத்தை உடைய திறந்த பிரதேசம் ஒன்று எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.	திறந்த பகுதியை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	சொத்துக்கள் முழுமையாக மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 செயற்திட்டங்கள், செய்பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட 02 பாதைச் செயற்திட்டங்கள் உடன்படிக்கைக் காலம் நீடிக்கப்படாமையால் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது.	சீரற்ற காலநிலை காரணமாக கால நீடிப்புக்காக வேண்டிக்கொண்ட போதிலும், காலம் நீடிக்கப்படாமையால் பிரதேச செயலாளரின் வாய்மொழிமூல அறிவுரையின் படி செயற்திட்டங்களின் வேலை இடைநிறுத்தப்பட்டது.	அபிவிருத்தித் திட்டங்கள் உடன்படிக்கை மேற்கொண்டவாறு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், திருத்திய திட்டங்களுக்காக நியாயமான காரணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.6 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் 02 பதவிகளுக்குரிய 12 மிகைகளை முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்குரிய மிகைகளை சரி செய்தவற்கு சபையிடம் இயலுமை காணப்படாததுடன் மற்றும் கணினி இயக்குனர் பதவிக்கான அங்கீகாரம் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	சபையின் பதவியணித் தேவைப்பாடு தொடர்பாக முறையான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் படி முறைப் பிரகாரம் இடமாற்றக் கொள்கையொன்று செயற்படுத்தப்படாமையால் சபையில் கடமையாற்றும் பதவியணியில் 02 உத்தியோத்தர்கள் / ஊழியர்களுக்கு 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலம் ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றி வருகின்றது.	2025 வருடாந்த இடமாற்றத்திற்காக இந்த உத்தியோகத்தர்கள் இடமாற்றத்தின் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுளளது.	சுற்றறிக்கையின் படி முறைப்பிரகாரம் இடமாற்ற கொள்கை செயற்படுத்தப்பட வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	03 செலவு விடயங்களில் பாதகமான முரண்கள் ரூபா 6.9 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், அது 15 சதவீத்திலிருந்து 166 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.	புதவியணி செலவுகள் அதிகரித்தல் மற்றும் மதிப்பீடு செய்யப்படாத செலவுகள் மேற்கொள்ள நேரிடல் இதற்கான காரணமாக இருந்தது என.	முரண்களை குறைத்துக்கொள்ள வேண்டியதுடன், அதற்காக திட்டமிடல் முறைப் பிரகாரம் மேற்கொள்ள வேண்டியதுடன், செலவுக் கட்டுப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் போது செலவு விடயங்கள் இடையே ரூபா 16.99 மில்லியன் தொகை ஏற்பாடுகள் மாற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், செலவு விடயங்கள் தொடர்பாக சரியாக பாதீட்டு ஏற்பாடுகள் ஒதுக்கிக் கொள்ளாமை இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது.	எதிர்வு கூறப்பட்ட செலவுகளுக்கு மேலதிகமாக எதிர்பார்க்காத செலவுகள் மேற்கொள்ள நேரிட்டிருந்தது என.	செலவுகளை சரியாக இனங்கண்டு தேவையான ஏற்பாடுகளை சரியாக மதிப்பீடு செய்ய வேண்டும்.